[2010 ஏப்ரல் 20

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு புதிதாக விடுதிகள் ஆரம்பிக்கும்பட்சத்தில், அங்கே ஆரம்பித்துத் தருவதாக உறுதி அளித்திருக்கின்றார்கள். இன்னொன்றையும் நான் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன். அவ்வாறு நீங்கள் புதிய விடுதி அமைக்க, நிதி தருவீர்களானால், அதற்குரிய இடமும் இலவசமாக தென்னிந்திய திருச்சபையினுடைய பேராலயத்திலிருந்து தருவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்து, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துகின்ற இந்த நன்னாளில் தமிழுக்குத் தொண்டாற்றிய கால்டுவெல் அவர்கள் வாழ்ந்து மறைந்த இல்லத்தின் அருகில் ஒரு மாணவர் விடுதியைச் சிறப்பு நிகழ்வாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தை நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம். அந்த ஆர்வம் குறையாமல் இருப்பதற்கு வேண்டிய பணிகளை இந்த அரசாங்கம் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

66—

புதுப்பித்தல்

***61323—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், அறப்பளீஸ்வரர் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கொல்லிமலை அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் கடந்த 2001 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்று 8 ஆண்டுகள் ஆகியுள்ளன. திருக்கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட வேண்டும் என்ற விதிகளுக்கிணங்க பணி நடைபெற்றிருப்பதாலும், அதேநேரத்தில் இந்தத் திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளது என்ற காரணத்தினாலும் தற்போது திருக்கோயிலைப் புதுப்பிக்க அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள, அறப்பளீஸ்வரர் கோயில் பழைமைவாய்ந்த ஒரு கோயிலாகும். இந்தக் கோயில் சுயம்புலிங்கத்தைக்கொண்ட கோயிலாகும். கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி மன்னன்தான் இக்கோயிலை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடைய பொறுப்பிலே பராமரித்து வந்தார். இந்தக் கோயிலில் 10 ஆண்டுகளுக்கு முன்புதான் கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள் என்பது உண்மை. அக்கோயிலைப் புதுப்பித்து, வர்ணம் பூசி மீண்டும் கும்பாபிஷேகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய காலம் வருகின்ற நேரத்தில் அதற்கான பணிகள் நிச்சயமாகச் செய்யப்படும். இடைப்பட்ட காலத்தில், அங்கே வரக்கூடிய பக்தர்களுக்கு வசதியாக, ஏறத்தாழ 22 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட நிருவாகத்தினுடைய*

ஒத்துழைப்போடு சுற்றுலாத் துறையின் நிதியைக்கொண்டு 10 இலட்சம் ரூபாய்க்கு ஓய்வறை ஒன்றும், 7 இலட்சம் ரூபாய்க்கு தண்ணீர் வசதி செய்வதற்காக கிணறு வெட்டுவதற்கும், 5 இலட்சம் ரூபாய்க்கு கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்வதற்குமுரிய அந்தப் பணிகள் வெகு விரைவிலே தொடங்க இருக்கின்றன. திருப்பணியும் குடமுழுக்கும் உரிய நேரத்தில் நடத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்தான் வல்வில் ஓரி மன்னன் ஆவார். அவருடைய சிலையைத்தான் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு விழா எடுத்து திறந்து வைத்தார்கள். வல்வில் ஓரி மன்னன் என்பவர் அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயிலைத் தன்னுடைய பொறுப்பிலே பராமரிப்புச் செய்து வந்துள்ளார். வல்வில் ஓரி மன்னன் என்பவர்தான் சுரங்கத்தின் வழியாக ஒரேயொரு நாளில் ஏழு சிவன் கோயில்களை தரிசனம் செய்து வந்துள்ளார். அந்தக் கோயில்களில் ஒன்றுதான் வரலாற்றில் சிறப்புமிக்க அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயிலாகும். கொல்லிமலை சுற்றுலாத்தலமாக விளங்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், சுற்றுலாத் துறையின் மூலமாக கொல்லிமலையிலே கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் செலவிலே சுற்றுலாப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே கோயில் அருகில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தநேரத்திலே கோயில் உள்ளே இருக்கிற அந்தக் கோயில்களையும் புதுப்பித்து வர்ணம் பூசி அதற்கு நீங்கள் கும்பாபிஷேகம் செய்தால் இன்னும் அதிக மக்கள் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். கோயில் புதுப்பிக்கப்படுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்காலத்து மன்னர்கள் எப்படி திருக்கோயில்களில் கவனம் செலுத்தி எழுப்பினார்களோ, அதற்கிணையான கவனத்தையும் அக்கறையையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்துறைக்குச் செலுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, 13-வது நிதிக் குழுவிலேகூட முதல்முறையாக 100 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருக்கோயில் குறித்து நான் ஏற்கெனவே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். எட்டாண்டுகள் கடந்திருக்கிற நிலையில், இன்னும் ஓரிரு ஆண்டுகளில் அந்தப் பணியைத் துவங்கினால்தான் குடமுழுக்கு நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். குறிப்பிட்ட காலத்தில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

தரம் உயர்த்துதல்

116998*—திரு. எஸ். ராஜகுமார்:

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை, மணல்மேடு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை, மணல்மேடு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலேயே 8 கிலோ மீட்டர் தூரத்தில், திருமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியும், 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் மணல்மேடு அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளன.